*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **17 செப்டம்பர் 2025**

## பத்திரிகை செய்தி

மத்திய அரசின் இரு வார சேவை உற்சவத்தை முன்னிட்டு, மணப்பட்டு கடற்கரையில் கடலோர காவல்படை சார்பில் நடைபெறும் கடற்கரை தூய்மை பணி மற்றும் வனத்துறை சார்பில் நடைபெறும் தாயின் பேரில் ஒரு மரம் 2.0 தொடக்க விழா இன்று (17.09.2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவினை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியின் போது நாட்டு நலப்பணித்திட்ட மற்றும் தேசிய மாணவர் படையினரின் கடற்கரை தூய்மை பணியை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். அம்மா வனம், ஆன்மீக வனத் திட்டங்களை தொடங்கி வைத்தார். மேலும், பசுமை பாதுகாப்பை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயலர் திரு சரத் சௌகான், அரசு செயலர்கள் திரு ஜவகர், திரு ஜெயந்த குமார் ரே, திரு பங்கஜ் குமார் ஜா, திரு கேசவன், உள்ளாட்சித் துறை இயக்குனர் திரு சக்திவேல், கடலோர காவல் படையின் இயக்குனர் திரு எஸ் எஸ் தசீலா ஆகியோர் பங்கேற்றனர்.